மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 194/2013 | சாட்சி | பி.வா.சா.2 |
| பெயர் | அமுதா | நாள் | 22.01.2025 |
| கணவர் பெயர் | ஆறுமுகம் (எ) சேகர் | | |

**வாதிகள் தரப்பில் பி.வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை:–**

1) இந்த வழக்கில் எனக்கு முன்பாக சாட்சியம் அளித்த பி.வா.சா.1 ஆறுமுகம் (எ) சேகர் என் கணவர் என்றால், சரிதான். இவ்வழக்கை யார் தாக்கல் செய்துள்ளது என எனக்கு தெரியுமா என்றால், தெரியும். சித்தன், குழந்தைபையன், காவேரி, ஆறுமுகம் ஆகிய நால்வர் சேர்ந்து எங்கள் மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். எதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால், தடவழி கேட்டு தாக்கல் செய்துள்ளனர். எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால், கையெழுத்து போடத்தெரியும். ஆனால், படிக்க தெரியாது.

2) என் முதல் விசாரணை சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் குறித்து எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. என்னிடம் படித்து காட்டினார்களா என்றால், இல்லை. இவ்வழக்கில் எந்தெந்த சர்வே எண்களில் தடவழி செல்வதாக சொல்லப்பட்டுள்ளது என எனக்கு தெரியுமா என்றால், தெரியும். ச.எண்கள்.248/1B, 248/1A3, 247/1B ஆகிய சர்வே எண்களின் வழியாக தடவழி செல்வதாக சொல்லியுள்ளார்கள். என் முதல் விசாரணை சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் என்னென்ன சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என எனக்கு தெரியுமாஎ ன்றால், தெரியாது.

3) மேற்படி ச.எண்கள்.248/1B, 248/1A3, 247/1B ஆகியவற்றிற்குரிய சக்குபந்தி விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. தற்போது இவ்வழக்கில் நான் தரப்பினர் அல்ல என்றால், சரிதான். எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால், சுமார் 30 வருடங்கள் இருக்கும். என் பூர்வீகம் என்னவென்றால், ஓமலூர் வட்டம், காமலாபுரம் அருகே தாத்தியம்பட்டி ஆகும். திருமணத்திற்கு முன்பு என் கணவர் குடும்பத்திற்குள் சொத்து குறித்து நடைபெற்ற சமாச்சாரங்கள் குறித்து எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

4) வாதிகள், பிரதிவாதிகளின் மூதாதையர் பெயர் என்னவென்றால், மந்தி (எ) காவேரி ஆவார். அவர் என் மாமனாரின் தந்தை ஆவார். மேற்படி மந்தி (எ) காவேரி என்பவரை நான் பார்த்துள்ளேனா என்றால், இல்லை. மேற்படி மந்தி (எ) காவேரி எப்போது இறந்தார் என எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. என் திருமணத்திற்கு முன்பே அவர் இறந்துவிட்டார். மேற்படி மந்தி (எ) காவேரி என்பவரின் மனைவி பெயர் என்னவென்றால், அது எனக்கு தெரியாது.

5) மேற்படி மந்தி (எ) காவேரி என்பவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால், மூன்று ஆண் வாரிசுகளும், ஒரு பெண் வாரிசும் இருந்தனர். அவர்கள் பெயர் தெரியுமா என்றால், தெரியும். அவர்கள் பெயர்களாவன 1. என் மாமனார் அம்மாசி, 2. சித்தன், 3.சின்னப்பன், 4.பாப்பாயாள் ஆகும். மேற்படி நபர்களை நான் பார்த்துள்ளேனா என்றால், என் மாமனார் அம்மாசி மற்றும் அவரது சகோதரி பாப்பாயாள் ஆகியோரை தெரியும். மற்ற இருவரை நான் பார்த்ததில்லை.

6) மேற்படி மந்தி (எ) காவேரி தன் வாரிசுதாரர்களுக்கு எவ்வாறு சொத்துக்களை பிரித்து கொடுத்தார் என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான். மேற்படி மந்தி (எ) காவேரி எந்தெந்த சர்வே எண்களில் எவ்வளவு சொத்துக்களை தன் வாரிசுகளுக்கு கொடுத்தார் என எனக்கு தெரியுமா என்றால், மொத்தம் 2.13 ஏக்கர் நிலத்தை மூன்றாக தன் ஆண் வாரிசுகளுக்கு அவர் பிரித்து கொடுத்தாக என் மாமனார் கூறி நான் கேள்விப்பட்டுள்ளேன். நேரடியாக எனக்கு தெரியாது.

7) மேற்படி மந்தி (எ) காவேரி உயிருடன் இருந்த சமயத்திலேயே மேற்படி சொத்து பிரித்து கொடுக்கப்பட்டது என என் மாமனார் என்னிடம் சொல்லியுள்ளார் என்றால், சரிதான். மேற்படி பாகபிரிவினையில் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு நிலம் ஒதுக்கப்பட்டது என எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. என்னுடைய மாமனாருக்கு எந்த சர்வே எண்ணில், எவ்வளவு நிலம், எந்த சக்குபந்திக்குள் பிரித்து கொடுக்கப்பட்டது என எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

8) மேற்படி மந்தி (எ) காவேரி தன் ஆண் வாரிசுகளுக்கு தன் சொத்தை வாய்மொழியாக பிரித்து கொடுத்தது பற்றி என் முதல் விசாரணை சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் நான் என்ன சொல்லியுள்ளேன் என எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. சிந்தாமணியூர் மெயின் ரோடு எவ்வாறு அமைந்துள்ளது என்றால், கிழக்கிலிருந்து மேற்காக செல்கிறது. மேற்படி சிந்தாமணியூர் மெயின் ரோட்டிற்கு எந்த திசையில் எங்களது நிலம் அமைந்துள்ளது என்றால், ரோட்டிற்கு வலது கை பக்கம் எங்களது நிலம் உள்ளது. சாட்சி மீண்டும் சிந்தாமணியூர் மெயின் ரோட்டிற்கு வடக்கு பக்கமாக நிலம் உள்ளதாக கூறுகிறார்.

9) என் மாமனாருக்கு பாகமாக பிரிந்த சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. எவ்வளவு நிலம் பாகமாக பிரிந்தது என எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. எத்தனை பகுதிகளாக என் மாமனாருக்கு நிலம் ஒதுக்கப்பட்டது என எனக்கு தெரியுமா என்றால், மூன்று பகுதிகளாக ஒதுக்கப்பட்டது. மேற்படி மூன்று பகுதிகளுக்கும் சக்குபந்தி விவரம் குறித்து எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு சரியாக தெரியவில்லை. மேற்படி மூன்று பகுதிகளிலும் ஒவ்வொரு பகுதிகளிலும் எவ்வளவு அளவில் சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியாது.

10) என் மாமனார் அம்மாசிக்கு எத்தனை வாரிசுகள் என்றால், மூன்று ஆண் வாரிசுகளும், மூன்று பெண் வாரிசுகளும் உள்ளனர். தற்போது என் மாமனார் உள்ளாரா என்றால், இறந்துவிட்டார். எப்போது இறந்தார் என்றால், சுமார் 10 வருடங்களுக்கு மேல் இருக்கும். இவ்வழக்கு தாக்கல் செய்யும் பொழுது என் மாமனார் உயிருடன் இருந்தாரா என்றால், இல்லை. மேற்படி என் மாமனாரது சொத்து அவரது வாரிசுகளுக்குள் பாகம் பிரிக்கப்பட்டுவிட்டதா என்றால், இல்லை. இவ்வழக்கில் யார் பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள். அதை யார் ஏற்றுக்கொண்டுள்ளனர் என எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

11) பதிலுரையில் என்ன சங்கதிகள் கூறப்பட்டுள்ளது என எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. மேற்படி பதிலுரையை பற்றி என் முதல் விசாரணை சாட்சியத்தில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. என் முதல் விசாரணை சாட்சியத்தில் எந்தெந்த சர்வே எண்களில் 10 அடி, 3 அடி அகலங்களில் பாதை செல்வதை மறுத்து நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், அது குறித்து எனக்கு சரியாக தெரியவில்லை. ச.எண்.248/1B க்கு எந்த திசையில் வாதிகளின் நிலம் அமைந்துள்ளது என்றால், வடக்கு திசையில் உள்ளது.

12) மேற்படி சொத்து முழுவதையும் மந்தி (எ) காவேரியின் வாரிசுகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரிதான். பொதுவாக பங்காளிகளின் நிலத்தின் வழியாகத்தான் தடவழி இருக்கும் என்றால், சரிதான். ஆனால், வாதிகளுக்கும், எங்களுக்கும் தனித்தனியாக தடவழி உள்ளது. அவ்வாறுள்ள நிலையில், எங்கள் இருவருக்கும் எந்தெந்த சர்வே எண்ணில் தடவழி உள்ளது என நான் சொல்லியுள்ளேனா என்றால், ச.எண்.247 ல் உள்ள நிலத்தின் வழியாக நாங்கள் செல்கிறோம். (சாட்சி தற்போது ச.எண்.248/2 ன் வழியாக செல்வதாக சொல்கிறார்.) வாதிகள் எந்த சர்வே எண் வழியாக செல்கிறார்கள் என எனக்கு தெரியாது.

13) வாதிகளும், நாங்களும் எங்களுக்கு பிரிந்த நிலங்களில் வீடுகள் கட்டி, கந்தாயம் செலுத்தி வாழ்ந்து வருகிறோம் என்றால், சரிதான். அதேபோல், இரு தரப்பினரும் அவரவர் வீட்டிற்கு மின் இணைப்பு பெற்று அனுபவித்து வருகிறோம் என்றால், சரிதான். மேற்படி சங்கதிகள் தொடர்பாக என் முதல் விசாரணை சாட்சியத்தில் என்ன சொல்லியுள்ளோம் என எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. (வாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/−திரு. R.மணிவர்மன்,<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>
மேட்டூர்.